## பயிற்சி 5.5

I5M5XW

### பலவுள் தெரிவு வினாக்கள்

1. $(-5,0)$ , $(0,-5)$ மற்றும் $(5,0)$ ஆகிய புள்ளிகளால் அமைக்கப்படும் முக்கோணத்தின் பரப்பு

   (அ) 0 ச.அலகுகள் (ஆ) 25 ச.அலகுகள் (இ) 5 ச.அலகுகள் (ஈ) எதுவுமில்லை

2. ஒரு சுவரின் அருகே நடந்து சென்று கொண்டிருக்கும் ஒரு நபருக்கும் சுவருக்கும் இடையே உள்ள தூரம் 10 அலகுகள். சுவரை $Y$–அச்சாகக் கருதினால், அந்த நபர் செல்லும் பாதை என்பது

   (அ) $x=10$ (ஆ) $y=10$ (இ) $x=0$ (ஈ) $y=0$

3. $x=11$ எனக் கொடுக்கப்பட்ட நேர்க்கோட்டின் சமன்பாடானது

   (அ) $X$–அச்சுக்கு இணை (ஆ) $Y$–அச்சுக்கு இணை
   (இ) ஆதிப் புள்ளி வழிச் செல்லும் (ஈ) $(0,11)$ என்ற புள்ளி வழிச் செல்லும்

4. $(5,7)$, $(3,p)$ மற்றும் $(6,6)$ என்பன ஒரு கோடமைந்தவை எனில், $p$–யின் மதிப்பு

   (அ) 3 (ஆ) 6 (இ) 9 (ஈ) 12

5. $3x-y=4$ மற்றும் $x+y=8$ ஆகிய நேர்க்கோடுகள் சந்திக்கும் புள்ளி

   (அ) $(5,3)$ (ஆ) $(2,4)$ (இ) $(3,5)$ (ஈ) $(4,4)$

6. $(12,3)$, $(4,a)$ என்ற புள்ளிகளை இணைக்கும் கோட்டின் சாய்வு $\frac{1}{8}$ எனில், '$a$' –யின் மதிப்பு.

   (அ) 1 (ஆ) 4 (இ) $-5$ (ஈ) 2

7. $(0,0)$ மற்றும் $(-8,8)$ என்ற புள்ளிகளை இணைக்கும் கோட்டிற்குச் செங்குத்தான கோட்டின் சாய்வு

   (அ) $-1$ (ஆ) 1 (இ) $\frac{1}{3}$ (ஈ) $-8$

8. கோட்டுத்துண்டு $PQ$–யின் சாய்வு $\frac{1}{\sqrt{3}}$ எனில், $PQ$–க்கு செங்குத்தான இரு சம வெட்டியின் சாய்வு

   (அ) $\sqrt{3}$ (ஆ) $-\sqrt{3}$ (இ) $\frac{1}{\sqrt{3}}$ (ஈ) 0